374

M. 1630. **APRIL. 1923.**

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷூல் மஹறிபா என்னும்

ஞான சூரியன்

இது ஒரு சிறந்த மாதாரம்பத் தமிழ்ப் பத்திரிகை.

GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 2 — ருத்ரோற்காரி வருடம் சித்திரை மீ 1உ — 1923வருடம் ஏப்ரல் மீ 13உ — இதழ் 1

Vol. II. No. I.

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
கடவுள் வணக்கம்	1
சீவன்முத்தர்களிலக்கணம்—மணிமுத்துநாயகம்	2
சன்னியாசம்—ஞானக்களஞ்சியம்	6
வேதாந்தக் கீர்த்தனம்—மணிமுத்துநாயகம்	9
சங்கீதம்—ஞானக்களஞ்சியம்	10
கொல்லாமை—காரைச்சிவனடியார் திருக்கூட்டம்	13
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்— ஷை	15
கணித சன்னியாசம்—வேதாந்த பாஸ்கரன் 2-ம் பாகம்	16
வைத்தியம்—க. ஞானபூபதி.	19
ஆசிரியரிலக்கணம்—வேதாந்த பாஸ்கரன்	21
சீடரிலக்கணம்—வேதாந்த பாஸ்கரன்	22
முக்கிய அறிவிப்பு—பத்திராதிபர்	24

இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி
எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ 1—8—0
பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ 0—3—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனாமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு	...	ரூபா	7—0—0
அரை பக்கத்திற்கு	,,	,,	4—0—0
கால் பக்கத்திற்கு	,,	,,	2—8—0

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு 12½ கூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும், நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு, பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனாமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசர் சந்துணை.

ஸம்ஷுல் மஹ்றிபா என்னும்

ஞா ன சூ ரி ய ன்.

இது ஒரு சிறந்த மாதாரம்பத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2.] ருத்ரோற்காரி ஹூ சித்திரைமீ 1வ. [இதழ் 1.

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
ஞானிலத் துதித்தமா னிடர்கள்
ஊனெனு மகந்தைக் காரிருட் படலம்
கலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
யாரமிர்தே யென்கண்ணே யரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்ற வொன்றே புனிதவாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங் கேளே.

(தாயுமான வள்ளல்.)

ஞானசூரியன்.

உருத்திரோற்காரி௵ சித்திரை௴ 1௳.

சீவன்முத்தர்களிலக்கணம்.

விருத்தம்.

பூவை யர்க்கிடை போந்தங் கிருப்பினும்
மாவ ழுங்கு வனத்தி லிருப்பினும்
யாவு மொன்றென் றியம்பிடும் நால்வகைச்
சீவன் முத்தர் செயலை விளக்குவாம்.

சீவன் முத்தர்கள் நான்கு வகைப் பெயருடையவர்கள். அவர்கள் முதலாவது பிரமவித்து, இரண்டாவது பிரமவரன், மூன்றாவது பிரமவரியான், நான்காவது பிரமவரிட்டன் என்பவர்களே.

குறிப்பு:—ஞான சப்த (ஏழு) பூமிகளில் முதன் மூன்று பூமிகளின் அதிகாரிகளாகிய சாதகர்கள் விபரம் முன் அத்தியாயத்திற் கூறிவிட்டபடியால், இந்த அத்தியாயத்தில் நாலாம் பூமிமுதல் ஏழாம் பூமி வரையிலுள்ள நான்கு அதிகாரிகளாகிய சீவன் முத்தர்களைப் பற்றிச் சொல்லப் போகின்றோம்.

இவர்கள் ஞானசத்த பூமிகளில் நான்காம்பூமிக்கு முறையே பிரமவித்தும், ஐந்தாம் பூமிக்குப் பிரமவரனும், ஆறும் பூமிக்குப் பிரமவரியானும், ஏழாம் பூமிக்குப் பிரமவரிட்டனும் அதிகாரிகளாவார்கள்.

1. பிரமவித்து விபரம்.

சத்துவாபத்தி யென்னும் நான்காவது பூமியிலேறியவருக்குப் பிரமவித்து என்று பெயர். இப்பூமியானது பிரபஞ்சத்தைச் சொற்பனத்தைப்போல் தோற்றுவிக்கும் குணமுடையதாதலால், இப்பூமிக்குச் சொற்பனாவத்தையென்றும்; இப்பூமியில் தியானிக்கப்படுகிற பொருள் பிரமவித்தினால் செவ்வையாக அநுபவிக்கப் பெறுவதால் இப்பூமிக்கு (*) சம்பிரஞ்ஞாத யோகபூமியென்றும்

(*) சம்பிரஞ்ஞாத யோகபூமியிற் புரியும் தவத்திற்குச் சவிகற்ப சமாதியென்றும்; சம்பிரஞ்ஞாத சமாதி யென்றும்: அசம்பிரஞ்ஞாத யோகபூமியிற் புரியுந் தவத்திற்கு நிருவிகற்ப சமாதியென்றும்; அசம்பிரஞ்ஞாத சமாதியென்றும் பெயர். இவற்றின் விரிவை வேதாந்த பாஸ்கரன் முதற்பாகம் (2-ம் பதிப்பு) சமாதி பேதத்திற் காண்க.

பெயர். இனிச் சொல்லப்போகின்ற 5, 6, 7-வது பூமிகளாகிய மூன்று பூமிகளில் தியானிக்கப்படுகிற பொருள் செவ்வையாக அனுபவிக்கப்படாததால் அசம்பிரஞ்ஞாத யோகபூமிகளென்று சொல்லப்பெறும்.

முன் அத்தியாயத்திற் கூறப்பெற்றுள்ள முதன் மூன்று பூமிகளால் சுத்த சத்துவமாகிய அந்தக்கரணத்தி லுண்டாகும் 'நான் பிரம்மம்' என்னும் சொரூபத்தையுடைய அபரோட்ச ஞான விருத்தியே சத்துவாபத்தியாகும். இந்தப் பூமியிலேறிய பிரமவித்துக்கள்தான் முன் ஏழாவது அத்தியாயத்திற் கூறிய அணிமாதி அட்டமாசித்திகளைச் செய்ய முயல்வார்கள்.

அபரோட்ச ஞானம்.

தத் என்பது என்ன! துவம் என்பது என்ன! என்று உபநிடத சிரவண மனனாதிகளால் மகானுபாவர்களாகிய தக்கோரிடத்தில் விசாரணைசெய்து அவ்வவற்றிலுள்ள சகல சந்தேகங்களும் நீங்கி, அசி யென்னும் பதத்தினல் அத்துவிதமாகிய ஐக்கிய நிலையைத் தானாக விளக்குதலே அபரோட்ச ஞானமாகும்.

பரோட்ச ஞானம்.

தேவலோகம், இந்திராதி தேவர்கள், அரம்பையர் முதலியவர் இருக்கிறார்கள் என்னும் புராணக் கூற்றைக் கேட்டு, இப்படித்தான் இருப்பார்கள், அப்படித்தான் இருப்பார்கள் என்று உத்தேசமாய் மதித்துக்கொள்வதுபோல், ஞானாசிரியரது உபதேச வாக்கியத்தால் தனது உண்மை வடிவம் இவ்வாறுதான் இருக்கும் அவ்வாறுதான் இருக்கும் என்று குறியாது குறித்துக்கோடலே பரோட்ச ஞானமாகும்.

தத்துவமசி என்பதின் விபரம்.

தத் - துவம் - அசி - தத்துவமசி. தத் என்பது அது என்னும் பிரம்மம். துவம் என்பது நீ என்னுங் கூடஸ்தன். அசி என்பது ஆனாய் என்னும் வாச்சியார்த்தம். ஆகையால் தத்துவம் அசி என்பதற்கு, அது நீ ஆனாய் என்று பொருள். தத் என்பது தற்

பதம். துவம் என்பது தொம்பதம். இவ்விரண்டும் இலக்கியார்த்தம். அசி என்பது அசிபதம். இது வாக்கியார்த்தம். தசேந்திரிய வியாபாரங்களையறிகிற சீவனே வாச்சியார்த்தம். அந்தக்கரணத்தையும் அதன் விருத்திகளையும் தேகேந்திரியாதி வியாபாரங்களையும் நீக்கிக் கூடஸ்தனுனதுவே இலட்சியார்த்தம்.

திருமந்திரம்.

சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனுர்
தாவு பரதுரி யத்தினிற் றற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பதம்
ஓவி விடுந்தத் துவமசி யுண்மையே.

பிரமவித்து என்பவர் யாதோருபாயங்கட்கும் கலங்காத தீரமுடையவராகவும், ஐயந் திரிபின்றித் தன்னை நன்குணர்ந்து தெளிந்தவராகவும், தெளிந்துணரு முன்னரே தமக்கு உரிமையாக ஏற்பட்ட வருணுச்சிரமதருமம் கன்மிகளுக்காகச் சொன்ன காரியமாயிருப்பினும் அவற்றைப் பிரபஞ்சதார்க்கு முன்னடையாகக் காணும்படி விதிவிலக்கு என்னும் ஏவல் விலகலின் ஒழுங்குக் கிணங்கச் செய்து காட்டுபவராகவும் விளங்குவார். இவர்க்கு காமக்குரோதாதிகள் எவ்விதச் சங்கற்பத்தாலேனும் வந்துவிட்டால், அவைகள் மின்னொளியைப் போலவும் நீர்மேற் குமிழியைப் போலவும் உடனே நீங்கிவிடும்.

சிவஞான வள்ளல்.

"பற்றறத் துறந்த ஞானப் பட்டினத் தடிகள்போலப்
பற்றறத் துறந்தே னில்லை." எனவும்,

கண்ணுடைய வள்ளல்.

"பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பாவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடர்." என்வும்,

தாயுமான வள்ளல்.

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை யரிதரிது." எனவும்,

"ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தென்நாளோ."

ணனவும் ஆன்றோர்களால் வியந்து கூறப்பெற்றவரும், இவ்விலப் பிரபஞ்சமெல்லாம் அநித்தியமென் றறிந்து தனது நவ கோடி திரவியங்களையும் தெருவில் சூறையாடிவிட்டு பற்றறத் துறந்துபோய் அத்துவிதச் செல்வத்தை அடைந்தவரும், சீவன் முத்தருமாகிய திருவெண்காட ரென்னும் பட்டினத்தடிகள் நாலாம்பூமியை அடைந்து சஞ்சார சமாதிகொண் டெழுந்துலாவுங் காலத்தில் ஒருநாள் ஒரு தாசியை வீதியிற்கண்டு அவளை ஆலிங்கனம் பண்ண விரும்பினார். அவ்வுருத்திர கணிகை அந்தக் கருத்துக் கிணங்காமல் விரைந்து சென்றனள். அதை யுணர்ந்த அடிகள்,

வாய்நாறு மூழல் மயிர்ச்சிக்கு நாறும் மையாடிடுங்கண்
பீநாறும் அங்கம் பிணவெடி நாறும் பெருங்குழிவாய்
சீநாறும் யோனி அழல்நாறும் இந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறும் மங்கையர்க்கோ இங்ஙனே மனம் பற்றியதே.

என்னும் பாசுரத்தை ஓதிவிட்டு அவ்விடத்தை நீங்கிச் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

இஃதிவ்வாறிருக்க பட்டினத்தடிகள் அபிப்பிராயத்திற்கு இணங்காமற் சென்ற தேவதாசியானவள் தனது கிரகத்திற்குச் சென்று வழியில் தனக்கும் பட்டினத்தடிகளாகிய பரதேசிக்கும் நிகழ்ந்த சப்பவங்களைத் தாய்க்கிழவியிடத்தில் ஆதியோடந்தமாய்ச் சொன்னாள். அதைக்கேட்ட தாய்க்கிழவி, நெருப்பிலிட்ட புழுவைப்போல் மனம் பதைத்து, 'அடி! பேதாய்! குளிக்கப் போனவள் சேற்றைப் பூசிக்கொண்டு வீட்டுக்கு வந்ததுபோல் நீ கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனஞ்செய்து பிராரத்துவ கன்மமூட்டை கரையும்படி புண்ணியந் தேடச்சென்றவள், அறியாமையால் மகானுடைய கருத்துக்கிணங்காத மாபாதகமென்னும் பெரிய மூட்டையைக் கட்டிச் சுமந்து வந்துவிட்டனையே? சூரியனது வெப்பத்தைச் சகித்துக்கொண்டாலும் அதனால் உஷ்ணமடைந்த மணற்சூட்டைப் பொறுக்கமுடியாததுபோல், கடவுளுடைய கோபத்தைச் சகித்துக்கொண்டாலும் அவரது திருவருள் நிறைந்த மெய்யடியார்களுடைய கோபத்தை எவராலுஞ்

சகிக்க முடியாதே? இனி இக்குடும்பத்திற்கு என்ன தீங்கு நேரிடப் போகிறதோ? இதற்கினி என்னசெய்வேன்? என்று வாய்விட்டாற்றி கீழேவிழுந்து புரண்டழுவதைக்கண்ட அவ்விளங்கணிகை, விரைந்து சென்று பட்டினத்தடிகளை யெங்குந் தேடியுங் காணப்பெறாமல் திகைத்து, மனம் வருந்தும்போது அடிகள் ஒரு திருவாசலில் அமர்ந்திருப்பதாகக் கேள்வியுற்றுச் சென்று கண்டு, பன்முறை பிரதட்சணம் வந்து நமஸ்கரித்து நின்று, ஞானமணி விளக்கே! கருணையங்கடலே! முத்திக்கரசே! பத்தரிதயத்தில் தித்திக்கும் அமுதே! சிவானந்தச்செல்வமே! குணக்குன்றமே! தேவரீரது பெருமையை அறியாமல் அடியாள் செய்த பெரும்பிழையைப் பொறுத்து சுவாமிகள் மனோரதத்தைப் பூர்த்திசெய்து என்னைக் காத்திரட்சிக்க வேண்டுமென மன்றாடிநின்று வருந்துவதைக் கண்ட அடிகள்,

(இன்னும் வரும்.)

சன்னியாசம்.

(269-ம் பக்கத் தொடர்ச்சி.)

மிகுத்திடுமுனமிற் படுதழலவிப்பான் விடுபவன் கலங்கனீர்தெளிநீர்
பகுத்திடானதுபோற் காடிசோறேனும் பசித்தவன் புசித்திடத்தகுமால்.

திரிகடுகம்.

வைததனை யின்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு மூறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

ஒருவீட்டில் பிரமசாரி, வானப்பிரத்தன் பிட்சைக்கு வந்திருக்குங் காலங்களில், அவ்வீட்டிற்குப் பிட்சைவாங்கப் போகக்கூடாது. தண்ணீரை வடிகட்டிச் சாப்பிடவேண்டும். பூமியிலுள்ள சிற்றுயிர்கள் துன்பமுறாமல் நடத்தல்வேண்டும். சோதிடம், நிமித்த சாஸ்திரம், பக்ஷிசாஸ்திரம், சரசாஸ்திரம், மந்திரம், வைத்தியம், ஜாலம் இவைகளைச் சொல்லிக் காண்பித்து வயிறு வளர்க்கக் கூடாது.

திருக்குறள்,

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்."

நல்லொழுக்கம், பொறுமை, திடஞானம், மனோநிக்கிரகம் முதலிய சகல சற்காரியங்களாலும் திருப்தியடைந்து, கருமயோகம் அல்லது ஞானயோகம் என்னும் குற்றமற்ற யோக சாதனை முதிர்ச்சியினால் பிரம சாயுச்சியம் அடைய முயலவேண்டும்.

(இதுவரையில் சன்னியாசிகள் ஆச்சிரம விதியைச் சொன்னோம். இனிச் சன்னியாசிகளிற் சிறந்த குடீசகன், பகூதகன், அம்சன், பரம அம்சன் என்பவர்களுடைய இலட்சணங்களைச் சொல்லப் போகின்றோம்.)

மேற்கூறிய நால்வரின் ஆச்சிரம விதிகளும் சன்னியாச ஆச்சிரம விதிகளும் சற்றேறக்குறைய ஒற்றுமையாகவே யிருக்கும்; அதிக தாரதம்மியம் இராது. ஆயினும் அவர்களின் குணாதிசயங்களிற் சிலவற்றைச் சொல்லுவாம்.

மந்தம், தீவிரம், தீவிரதரம் என விராகம் மூவகைப்படும். அவற்றுள், குடும்பத்தில் கொடிய துன்பம் நேரிட்டபோது வெளியேறுவதற் கெண்ணுவது மந்தவிராகம்.

இந்தச் சரீரமுள்ளவரையில் மனைவி, மக்கள், மண், பொன் முதலானவைகள் வேண்டாமென்று இயற்கையாகவே எண்ணியிருப்பது தீவிர விராகம்.

பிராமணர்களாகிய வேதியர்கள் அநுட்டிக்கத்தக்க மதாசாரமாகிய கன்மகாண்டச் செயல்கள் பொய்யென்று எண்ணிப் பற்றறக் கைவிடுதல் அதிதீவிர விராகம்.

கொடிய மந்த விராகத்தைச் சார்ந்த சன்னியாச நிலைகளில் ஒன்றேனும் பலிக்காது. தீவிர விராகத்தில் குடீசகம், பகூதகம் என இரண்டு பாகுபாடுகளுள்ளன. அவற்றுள், நடக்க சக்தியில்லாத துறவிக்கு குடீசகன் எனவும், பிரபஞ்சமெல்லாம் சஞ்சாரஞ் செய்யத்தக்க வலியுள்ள துறவிக்கு பகூதகன் எனவும் பெயர்.

தீவிரதர விராகத்தில், தீவிர விராகத்தைப் போலவே அம்சன், பரம அம்சன் என இரண்டு பாகுபாடுகளுள்ளன. அவற்றுள், அம்ச சன்னியாசிக்கு முத்தி, மறுமையாகிய சத்தியலோகத்தன்றி வாராதென்பார்கள். பரமாம்சனுக்கு இம்மையிலேயே மோட்சமானது ஞானானந்தத்தாற் கிடைக்கும் என்பார்கள்.

பரமாம்சன் என்பவர் சிஞ்ஞாசு, சுஞ்ஞானி என இருவகை. அவர்களுள், சிஞ்ஞாசு என்போன் ஞானபூமி யேழனுள் முன் மூன்று பூமியுமுண்டாக்கின்ற விவேக வடிவானவன். சுஞ்ஞானி என்பவன் சீவன் முத்திநிலையை யடைந்த பரிசுத்த நெறியிற் சிறந்தவன்.

சிஞ்ஞாசு என்பவனும் இருவகையாவன். பந்தத்துக் கிடமாயுள்ள மனைவியாதிகளைத் துறந்துவிட்டுச் சன்னியாசிகளாயிருந்து பிரம்ம ஞானத்தை யடைவார்கள். சிலர் பலவகைப்பட்ட வருணாச்சிரம தருமத்தை மேற்கொண்டு குடும்பத்திலிருந்தே ஞானத்தை யடைவார்கள்.

வேதவியாச மஹரிஷியின் புதல்வராகிய சுகப்பிரமரிஷியானவர், தமது பிதாவிடத்தில் சகல கலைக்கியானங்களையும் நன்குணர்ந்த காலத்து ஆச்சிரம விதிகளைப்பற்றி பிதாவிடம் சங்கித்தனர். அதற்கு மிதுலாபுரிக் கிறைவனும் தமது சீடனுமாகிய ஜனகமகாராசனிடஞ் சென்று சங்கையை நிவர்த்திசெய்துகொள்ளும்படி அனுமதி கொடுத்தனுப்பினர். அவ்வாறே ஜனகரிடம் வந்து, ஓ! ஜனகரே! வேத விதிப்பிரகாரம் ஒவ்வொரு ஆச்சிரமத் துறையையும் அனுசரித்து அந்தந்த வித்தியாசங்களைக்கண்டு வெறுப்படைந்து யதியாச்சிரமஞ் சேர்ந்து, அதனாலே தான் ஞானம் வரவேண்டுமோ? ஒருவேளை நல்ல புண்யவசத்தால் முதலாச்சிரமத்திலேயே ஞானம் வந்துவிட்டால் அது பிரயோசனப்படாதோ? ஆகாதென்கிற வழக்குண்டோ? நல்வினைப் பயனாற் கிடைத்துதானால் மற்ற மூன்றாச்சிரமத்தையும் அனுசரிக்கவேண்டிய முறையில்லையே? இதனுடைய திறத்தைச் செப்புமென்று

(இன்னும் வரும்)

(ஞானக்களஞ்சியம்.)

வேதாந்தக் கீர்த்தனம்.

ரத்ஞங்கி பார்ஸி தருபான் என்ற பார்ஸி மெட்டு.

பல்லவி.

தன்னையறிந் தின்பங்கொள்ளடி
ஜகமோ கனமாந் தனையே நினைவாய்
சத்துச்சித்தா னந்தந்தரும் (தன்)

அநுபல்லவி.

உன்னைநீ யறிந்துகொண்டால் உனக்கொரு கேடுமில்லை
என்னைக்கெஞ்சிக் கேட்டதாலே இந்தத் தந்திரத்தைச் சொன்னேன்
இங்கிதநல்வழி நில்நில்நில்நில் மங்களமாமொழி சொல்சொல்சொல்சொல்
ஙங்தும்பிர காசங்தங்கும் மங்கள சொரூபமாம் (தன்)

சரணங்கள்.

ஒன்பதுவாசலை யறிவார் வெளி
ஒன்பதுவாசலை யறிவார் மேல்
ஒருவா சலையே அறியார் தெரியார்
ஓசைமணி வாசல்காணார் (ஒன்)

அன்புருவ மாய்நிறைந்த ஆத்தும தபோபலத்தால்
இன்பமிகு மேலைவாசல் ஏழையுந் திறந்துகதிர்
இந்துகலந்து சிலம்புவலம்புரி கிண்கிணிசங்கொலி வண்டுமுழங்கிட
எட்டொ டிரண்டுமான கட்டழகு ரூபமாம் (தன்)

கம்பமதில் நீலவடிவாய் சுடர்க்
கம்பமதில் நீலவடிவாய் தெய்வக்
கன்னிகை என்னையே முன்னியே பொன்னெனக்
கலந்து மணந்துகொண்டாள் (கம்ப)

அம்பிகை மனோன்மணிப்பெண் செம்பொற்கும்பப் பால்குடித்து
செம்பொன்மணி மேடையிலே சேர்ந்துவிளை யாடையிலே
அங்கம்தங்கம் கொண்டிலங்க சங்கம்துங்கம் கங்கம்தங்க
ஆனந்தமிகுங் கருணை பரானந்த விலாசமாந் (தன்)

பல்லவி.

ஞான தேசிகனே
நாசி மேல்நின் றாடும் சோதி (ஞான)

சரணானுபல்லவி.

வானவர் யாரும் வணங்கும் ப்ரதாப
வாசா மகோசர மான சொரூபா
மந்த்ர யோக ராஜ ராஜ வாச நேச னேயுல் லாச (ஞான)
ஓங்கார வீட்டுக்குள் ஒன்பது வாசல்
ஒக்க அடைக்க உபாயம் நீசொல்
உன்னை நோக்கி உன்னை நீக்கி
என்னைப் பாரென் றுன்னைக் காட்டும் (ஞான)
மேலத் துவாரத்தில் சிந்தையை நாட்டி
காலனைக் காலால் விலங்கது பூட்டி
விண்ணின் மீது கண்ணைக் கூட்டி மெய்கண் டுய்யச் செய்யும் துய்ய ()
தித்திக்கும் ஞான கருணை யானந்தா
தேவாமிர் தம்போல் தெவிட்டாப் பிரபந்தா
சிந்தை யேயுன் சொந்த மாகச்
சேர்ந்து வாழ்ந்து பாந்த ணை (ஞான)

(மணிமுத்து நாயுகம்.)

சங்கீதம்.

(288-ம் பக்கத் தொடர்ச்சி.)

பேரின்பச் செய்யுள் என்னும் உயர்ந்த தங்கத்திற் பதித்து பிரகாசிக்கச் செய்யாமல், அதைச் சிற்றின்பப் பாடல் என்னும் தாழ்ந்த இரும்பிற் பதித்து மளினம் அடையச் செய்கின்றனரே. ஐயோ! என்ன பரிதாபம்! என்ன மதியீனம்!

இக்காலத்து வித்துவான்களிற் சிலர், பாட்டுக்கச்சேரிகளில் இராகம்பாடிப் பல்லவி பாடும்போது மனதுக்குத் தோன்றியவாறு பல்லவிகளை எடுத்துக்கொண்டு, சாதாரண ஜனங்களை இரஞ்சிக்கச் செய்யும் சதுரசிர நடைகளை விட்டுவிட்டுக் கண்ட நடைகளிலும், மிசிரநடைகளிலும், இக்கட்டான இடங்களிலும், பல்லவி எடுப்புகளை வைத்துக்கொண்டு, தாழங்குடையில் மழை பெய்கிற சப்தம்போல் சுரநிரவல்செய்து, பக்க வாத்தியக்காரர்களும் பாடகரும் தலைவிரி கோலமாய்த் தாளங்கள் போட்டு வேதாள

மாகி, ததிகிணதோம் தீர்மானங்கள் விழிபிதுங்கி உடல் வியர்க்க வைத்து பாட்டு கேட்க வந்தவர்களும் தங்கள் துடைகளில் தாளம்போட்டுத் துடைகளையும் புண்ணாகும்படிச்செய்து பாட்டுக்கச்சேரிகளை மாஜிஸ்ட்ரேட் கச்சேரிகள் ஆக்கிவிடுகிறார்கள். இந்தமாதிரியான பாட்டு, வித்துவத்தின் அம்சத்தைக் காண்பித்தபோதிலும் கூட, சாதாரண ஜனங்களை இரஞ்சிக்கச்செய்யும் சக்தியில்லை.

ஒருவர்செய்த தபோபலத்திற்குத் தக்கவாறு கடவுளானவர், இனிமையாகிய சாரீரத்தையும் சிறந்த சங்கீத ஞானத்தையும் கொடுத்திருக்கிறார். பிரபஞ்சம் என்னும் சேற்றில் அழுந்திக் கிடப்பவர்கள் அந்தப் பற்றுக்கோட்டைக் கொண்டு, பக்தி செலுத்தி முத்தியென்னும் கரைசேறுவதற்காகக் கடவுள்மீது ஆனந்த பரவசத்துடன் பாடி ஆடித் தோத்திரம் செய்யவேண்டியதிருக்க, சில சங்கீத வித்துவான்கள் அதற்கு நேர்விரோதமாக 'புண்ணின்மேல் பூச்சியுங் கடித்தவிதமாய்' கடிதடப் படுகுழியையே மோட்ச வீடாகக் கருதி, நாம் பத்து கீர்த்தனங்களை நன்றாய் சுரசாகித்தியத்துடன் வரப்பண்ணிக் கொண்டால், அவைகளை யுவதிப்பருவம் அடைந்த ஒரு வாலிப தாசிப்பெண்ணுக்குப் பாடமாகச் சொல்லிக் கொடுக்கலாம். அந்த நட்பினால் அவளிடத்தில் தன்னுடைய இஷ்டகாமியங்களை அனுபவிக்கலாம் என்று எண்ணி, அங்ஙனமே அனுபவித்துத் துன்புறுகிறார்கள்.

சில தாசிகளோவென்றால், மேற்கூறியபடி கீர்த்தனங்கள், ஜாவளிகள், சிந்துகள் முதலியவைகளில் 10, 20 உருப்படி பாடமாகிவிட்டால், இளைஞர்களை மருட்டி நமது கண் வலைக்குள் சிக்கும்படிச்செய்து அளவற்ற செல்வத்தைச் சம்பாதித்து விடலாம் என்று கருதுகிறார்கள். இக்காலத்தில் இந்த எண்ணத்துடனேதான், அநேகர் சங்கீதம் கற்றுக்கொள்ள முயல்கின்றனரே யன்றி, கடவுளைத் துதித்து ஆத்மலாபம் அடையவேண்டும் என்கிற எண்ணத்துடன் கற்றுக்கொள்ள முயல்வாரில்லை. அன்றியும்

சங்கீதத்தை ஆன்றோர்கள் ஏற்படுத்தியது என்ன காரணத்திற்காக என்று கேட்டறிந்து நடப்பவருமில்லை.

சங்கீத வித்தையானது ஓர் கூரிய வாளாயுதத்தை நிகர்த்தது. எங்ஙனம் கூரிய வாளாயுதமானது, தன்னுடலையே துணித்துக்கொள்ளவும், ஒன்னலரால் அபாயம் வாராதபடி தன் உடலைக் காத்துக்கொள்ளவும் உபயோகப்படுவதுபோல்; சங்கீதமானது ஒவ்வொரு மக்களும் பக்தி மார்க்கத்தால் முத்தியடைதற்கு சாதனமாயும், அனேக உயர் குடும்பத்திலுள்ள மடந்தையர்களைக் கூத்தாடிகளால் விபசாரியாகவும் செய்திருக்கிறது என்பதைப் பிரத்தியட்சமாகக் கண்டும் கேட்டுமிருக்கிறோம். ஆதலால் குடும்பத்திலுள்ள பெண்கள், நாடகம் பார்க்கப்போவது பெருந்தவறு. அவ்விதப் பெண்களுடைய கருத்துக் கிணங்கி, நாடகத்துக்கு அழைத்துப்போகும் புருடர்களும் பேடிகளேயன்றி, ஆண்பிள்ளைகள் அல்லர்.

விவேகசிந்தாமணி.

பெண்டுகள்சொற் கேட்கின்ற பேயரெனுங் குணமூடப்
பேடி லோபர்
முண்டைகளுக் கிணையில்லா மூளைவீரர் புருடரென
மொழியொ ணாதே.

முற்காலத்தில் தாசியென்றும் தேவடியாள் என்றும் ஏற்படுத்திய காரணம், சங்கீதத்தைக் கற்றுக்கொண்டு வாலியர்களை மயக்கிச் சர்மவியாபாரம் செய்து பணம் பறிப்பதற்காக அல்ல. தாசி என்றால் (கடவுளுக்கு) அடியாள் என்று பெயர். தேவடியாள் என்றாலும் (தேவ × அடியாள்) தேவனாகிய கடவுளுக்கு அடியாள் என்று பொருள்கொள்ளும். இக்காலத்துள்ள சில தாசிகளுக்கு, தாசி என்றால் அடியாள் என்று பொருள் கொள்ளாமல் தா × சி. அதாவது பணம் கொடுத்தால் தா என்று வாங்கி, பணம் கொடாவிட்டால் சீ ஓடிப்போ என்று துரத்திவிடுவதை நிரூபிக்கவே தாசி யென்று வழங்குகின்றது. தேவதாசிகளை இந்துக்களுடைய கோவிலிற் சென்று ஆடல்பாடல் செய்து வழிபடுவதற்காகவும்; சாமானியர்களை ஆலயத்திற்குத் தருவிப்ப

முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.

உலகத்தில் பிறந்திருக்கிற எல்லா உயிர்களும் கடவுள் திருவருளாலேயே உற்பவித்திருக்கின்றன. நமக்குக் கால், கை, வாய், மூக்கு, முகம் முதலியன விருப்பதுபோலவே மற்றப் பிராணிகளுக்கு மிருக்கின்றன. இன்பமும் துன்பமும் எல்லாருக்கும் ஒரு மாதிரியாகத் தான் நிகழுகின்றன. மனிதர்களுக்கு எப்படிப் பிள்ளை குட்டிகள் சுற்றத்தார் இருக்கின்றனரோ அப்படியே ஆடு, கோழிகளுக்கும் இருக்கின்றனர். கத்தி கொண்டு அறுத்த இடத்தில் மனித உடம்பில் இரத்தம் வடிவதுபோலவே அவைகளின் உடம்பிலிருந்தும் இரத்தம் வடிகிறது. அப்படியிருக்க இந்த உலகத்திலுள்ள சில மக்கள் வாயில்லாத ஏழைப் பிராணிகளாகிய ஆடு, கோழி, முயல், மான், பன்றி, வாத்து, கதுவாலி, புறா, உடும்பு முதலியவற்றை அறுத்து, உரித்து, அவித்து உண்டு ஏப்பமிட்டு விடுகின்றனர். உலகத்திலே பிறந்திருக்கிற ஆடுகள் முதலிய ஏழைப்பிராணிகள் காட்டுக்குழைகளைத் தின்று மழைத்தண்ணீரைக் குடித்துவிட்டுத் தெய்வமே என்று திரிகின்றன. அவைகள் மனிதருக்கு ஒரு தீங்குஞ் செய்வதில்லை. மேற்கொண்டு தாயாகவிருந்து பால் கொடுத்து நம்மை வளர்க்கின்றன. இப்படி நமக்கு உதவியாக விருக்கிற அற்ப ஜந்துவிற்கு உதவி புரியாவிட்டாலும் கழுத்தையறுத்துக் கொல்லலாமா? தலைகீழாகக் கட்டித் தோலைக் கழற்றிக் கண்டதுண்டமாக நறுக்கிக் கயிற்றில் கோத்துக்கட்ட மனமும் வருகிறதே! உலகத்தில் பெரிய கொலைகாரனைக்கூட இப்படியாகச் சித்திரவதை செய்வதில்லையே? கடவுளுக்கு அவரால் படைக்கப் பெற்ற எல்லா உயிரும் ஒருமாதிரிதான். அருள் வடிவமான கடவுள் ஒரு உயிரை உயர்வாகவும் ஒரு உயிரைத் தாழ்வாகவும் எண்ணுவாரா? அதிலும் பொய், கொலை, களவு, சூது, வஞ்சம் முதலிய குணமில்லாத பரிசுத்தமான ஆடுகளிடம் கருணையின்றி, இந்தக் கெட்ட காரியங்களை விடாது செய்துகொண்டிருக்கிற மக்களிடம் எப்படிக் கருணைகொள்ள முடியும்? கடவுள் சந்நிதானத்தில் ஏழைப் பிராணிகளுக்கே சிபார்ஸ் அதிகமிருக்

கும். ஆதலால் நேயர்களே! எந்த உடலையும் சிதைக்கவேண்டாம். நமது ஔவைப் பிராட்டியார் "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்ற முதுமொழியைக் கவனியுங்கள்! ஒரு ஆட்டைக் கழுத்தறுத்துத் தலைகீழாகக் கட்டி உரிப்பது எவ்வளவு பாவமாகும்? அப்படி உரித்த ஒருவரை யமலோகத்தில் அதே மாதிரி தலைகீழாகக் கட்டி உரிப்பார்கள்.

காரைச் சிவனடியார் திருக்கூட்டம்.

கணித சன்னியாசம்.

விருத்தம்.

துன்னுமிவ் வுலகிலுள்ளோர் சுகமிட ரடையுங்காலம்
மன்னிய கிரகம்போன்று வந்தது பலன்றானென்றே
பன்னுவ ரதனால்ஞான பரமசன்னி யாசயோகம்
இன்னின கிரகத்தால்வந் தெய்துமென் றியம்புவாமால்.

சோதிடமான ஆன்மகோடிகளின் பலாபலன்களைக் குறிக்கும் இன்றியமையாத ஒருவகைக் கணக்காம். தத்தம் பயிர் பச்சை பலிதப்படுவதற்கும் நினைத்த கருமங்கள் சித்தியாவதற்கும் இன்பதுன்பங்கள் நேரிடுவதற்கும் காரணம், கோள்களின் இபக்கம் என்பதே இத்தேயத்திற் பெரும்பான்மைபோருடைய கொள்கை. எந்த வேலையைத் தொடங்கிச் செய்வதானாலும், சோதிடர்களைக் கேட்டறிந்து சுபமுகூர்த்தத்திலே செய்யத் தொடங்குவார்கள். ஏர் உழுவதற்கும் விதை விதைப்பதற்கும் இன்ன இன்னநாள் இன்ன இன்னநட்சத்திரம் ஏற்றதென்று ஒரு சங்கேதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அன்றியும், தூரப் பிரயாணம் போவதானால் இன்னகிழமை இன்னவேளை ஆகாதென்று வரையறுக்கப் பட்டிருக்கின்றது. 'நாள் செய்வது நல்லார் செய்பார்' என்னும் பழமொழியே இதற்குச் சான்று. 'நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை' என விலக்கு ஏற்பட்டிருந்தும், சில நோயாளிகள் நல்ல நாளிலேதான் ஔடதம் சாப்பிடத் தலைப்படுவார்கள். நல்லநாள் பார்த்துத் தலையைச் சிரைப்பினும் உள்ளமயிர் முளைத்தேதீரும் என்பதை உணரார்கள் சிலர்

சோதிடர்களைக் கேட்டுப் பொருத்தம் நிமித்தம் பார்க்காமல் விவாகங்களை நடத்தவேமாட்டார்கள். பொருத்தம் நிமித்தம் சரிப்படாவிட்டால் கூடிவந்த கலியாணங்கூடக் கலைந்துபோகும். படிக்கத் தெரிந்தவர்கள் பக்கத்திலே பஞ்சாங்கம் ஒன்று தயாராக இருக்கும். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்து அங்கங்கள்கூடி இருப்பதால் அதற்குப் பஞ்சாங்கமெனப் பெயர் உண்டாயிற்று. அதில் சுபாசுப தினங்கள் இலக்கினங்கள் குறித்திருக்கும்.

அக்கணிதத்தைச் சரிவரக் கவனித்துக் கூறுதல் சாமானியர்கட் கியலாத காரியமாம். "அகப்பட்டுக் கொண்டவனுக்கு அட்டமத்தில் சனி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமிடத்தில் குரு" என்பதுபோற் சிலர் சோதிடம் சொல்வார்கள். ஆகையினாலேயே சோதிடம் சிற்சில சமயங்களில் பொய்யாக மதிக்கும்படி மாறுகலடைந்து போகின்றது. இதுபற்றியே கூடந்தையம்பதி ஆதி சங்கராச்சாரியர், பீடமேறும்போது நான் பாத, பண்டித, சோதிடமாகிய மூன்றிலும் வல்லவன் அல்லன் என்று கூறினராம்.

அகஸ்தியர் மதிவெண்பா.

போற்றுகின்ற சோதிடங்கள் பொய்யா தொருநாளும்
சாற்ற வகையறியா தார்க்கதுபொய்—சேர்த்தியுள்ள
ஆசானைத் தேடி யவர்பதத்திற் றெண்டுசெய்து
பேசானைப் போலே பிழை.

சன்னியாச பலன்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனியென்னும் ஏழு கிரகங்களில் நான்கு, ஐந்து, ஆறு, ஏழு கிரகங்கள் கூடியிருக்க, இவர்களில் வலிதுபெற்ற கிரகத்தினாலே சன்னியாசயோகம் ஏற்படும்.

சுக்கிரயோகம்.

ஒரு இராசியிலிருக்கும் கிரகங்களில் சுக்கிரன் வலிதாயிருக்கில், அச்சுக்கிரனாலே ஏற்பட்ட சன்னியாசமானது, இராஜனைப்போல வாத்தியங்கள், யானைகள், குதிரைகள், பல்லக்குகள் பல விருதுகளையு முடையவனாகிய இராஜ சன்னியாசமாகும்.

குருயோகம்.

ஒரு இராசியிலிருக்கும் கிரகங்களில் குரு வலிதாயிருக்கில், அந்த குருவினால் ஏற்பட்ட சன்னியாசமானது, காஷாயம், தண்டம், கவசகுண்டலம், விபூதிப்பூச்சும், உருத்திராக்க மாலையும் அணிந்துகொண்டு உலகமறியப் பிரம்ம நிலையையறியும் சன்னியாசமாகும்.

சூரியயோகம்.

ஒரு இராசியிலிருக்கும் கிரகங்களில் சூரியன் வலிதாயிருக்கில், அந்த சூரியனாலே கொடுக்கப்பெற்ற சன்னியாசமானது, காடு, மலை, வனங்களிலிருந்து காய், கனி, கிழங்கு, சருகாதிகளைப் புசித்துக்கொண்டு தனியாயிருந்து பிரமநிலையை யுணரும் வண்ணம் செய்யும்.

சனி, புதன், சந்திரயோகம்.

ஒரு இராசியிலிருக்கும் கிரகங்களில் சனி வலிதுபெற்றிருந்தால், அந்த சனியினால் கொடுத்த சன்னியாசமானது, சுகம், தனம், மனைவி, மக்கள் மானாபிமான முதலியவைகளையும் விட்டு நிருவாண சன்னியாசியாகவும்; புதன் வலிதாயிருக்கில் ஒரு தடிக்கம்பு கையில் தரித்தெங்கும் சஞ்சரிக்கின்ற சன்னியாசியாகவும், சந்திரனாகில் விருத்தாப்பியகாலத்தில் மனைவி மக்கள் வீடுவாசல் முதலான சம்பத்திலிருந்தாலும், அதைவிட்டு சிவவேடமாகிய கவசகுண்டலம் உருத்திராக்கம் விபூதி காஷாய முதலியவைகளைத் தரித்து, ஜலமிருக்கும்படியான பாத்திரத்துடனே பற்பல தேச யாத்திரை தீர்த்த யாத்திரைகளுஞ்செய்து பிச்சையெடுத்துண்டு திரியவுஞ்செய்யும்.

செவ்வாய் யோகம்.

ஒரு இராசியிலிருக்கும் கிரகங்களில் செவ்வாய் வலிதுபெற்றிருந்தால், அந்த செவ்வாயினால் கொடுக்கப்பட்ட சன்னியாசமானது, சிவந்த வஸ்திரம் அல்லது காஷாயம் தரித்து, வேத சாஸ்திரம், கலைக்கியானம், பல காவியங்களையுமுணர்ந்து, தத்துவக்ஞான பிரசங்கமும், சாஸ்திர பிரசங்கமுஞ் செய்து, மனக்களிப்புடனே யிருக்கச்செய்யும்.

(இன்னும் வரும்) வேதாந்த பாஸ்கரன் 2-ம் பாகம்.

வைத்தியம்.
(ஆபத்சகாயம்)

(284-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொல்லன் கோவைபென்கிற ஆகாச கருடன் கிழங்கை அரைத்துக் கொட்டைப்பாக்களவு ஆவின்பாலிற் கொள்ள, நரை திரை மாறும்; மேனி பொன்போல் ஒளியுண்டாம்: காலன் ஓடி யொளிப்பன். சர்வ நோய்களும் நீங்காத விஷகடி நோய்களும் விஷமும் நீங்கும். புளி தள்ளி, பாலும் அன்னமுமாக ஆகாரம் கொள்ளவும்.

நிலப்பனைக்கிழங்கை மேனிச்சாற்றால் அரைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சி, பல் வலிக்கும் பாகத்திற்றடவ பல்வலி நீங்கும். அதிலிருக்கும் புழுக்களும் சாகும்.

ஆடுதீண்டாமூலி வேரை அரைத்துக் கொட்டைப்பாக்களவு வெள்ளாட்டுப் பாலிற் கொள்ள, சகல விஷங்களும், புண், பிளவை, சிரங்கு, வங்கு, பல கரப்பன் குஷ்டங்களும் தீரும். சித்தர் தரிசனம் உண்டாம். இதன் சமூலத்தையும் கருங் குறுவை நெல்லுடன் அவித்து அவல் இடித்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி அவல் வீதம் ஒருமண்டலம் கொள்ள, சிரங்கு, சொறி, குஷ்டம், தழுதணை, வங்கு, வண்டுகடி, அரணைகடி, செய்யான்கடி, பூரான்கடி விஷங்களும் பதங்கி வெள்ளைப்புள்ளி கரப்பனும் தீரும். பாலும் மிளகும் தேய்த்து ஸ்நானம் செய்து வரவும். (3) மாதம்வரை நல்லெண்ணெய்-புணர்ச்சியை நீக்கவும்.

தாமரைக்கிழங்கை ஆவின்பாலிற் கொள்ள மேகம், வெட்டை, கிரிச்சிரம் தீரும்: தேககாந்தியும் கண் ஒளிர்வும் குளிர்ச்சியும் உண்டாம். காயசித்தியுண்டாம். இதன் மணிப்பருப்பைப் பொடித்து, முலைப்பாலிற் கொடுக்க, விக்கல், நாவறட்சி தீரும்.

சங்கம் வேரைப் பாலிற்கொண்டாலும் அல்லது வேர்ப் பட்டை பலம் (1) மிளகு பலம் (½) ஆவின்பால் விட்டரைத்து உடம்பில் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தாலும் அல்லது வேர்ப்

பட்டைத் தூள் பலம் (1) மிளகுத் தூள் பலம் அரை, சர்க்கரை பலம் (1) கூட்டித் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வந்தாலும் வண்டுகடி, குஷ்டம், கழுகணை, சொறி, தேமல், கிரந்தி, வெட்டை, சூலை, செங்கரப்பன், கருங்கரப்பன், சிறுசிரங்கு, பெருஞ்சிரங்கு தீரும்: தேககாந்தி யுண்டாம்.

நிலவாகைச் சமூலத்தை நிழலில் உலர்த்தித் தூள்செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு, திரிகடிப் பிரமாணம் ஆவின் நெய்யில் கொள்ள, உடம்பு பூரிக்கும்: தேனில் கொள்ள உடம்பு வற்றும்: சிற்றாமணக்கெண்ணெயிற் கொள்ள எலிகடி விஷம், சில்லரை விஷகடியும் வெப்பமும் வெந்நீரிற் கொள்ள கிருமியும், பசுவின்மோரிற் கொள்ள சமியாமையும், எருமைமோரில் எலிகடி விஷமும், எருமைச் சாணிப்பாலில் பெண்கள் கைமசக்கும் தீரும். பாகல் இலைச்சாற்றில் கொள்ள உடலில் கடிக்கும் செய்யான் விஷமும், மேனிச்சாற்றில் தேள் விஷமும், ஆலம்பழுப்புச் சாற்றில் பெரிச்சாளி கடிவிஷமும், வேம்பாடம் பட்டைச்சாற்றில் செவ்வட்டைக்கடியும், செம்மறி யாட்டுநீரில் அரணைகடியும், வீழிச்சாற்றில் விரியன் கடியும், தேசிப்பழச் சாற்றில் சர்வவிஷமும், பாகவிலைச்சாற்றில் நட்டுவக்காலி விஷமும், அவுரியிலைச்சாற்றில் அரணை, வண்டுகடி, புடையன் குத்து, தவளை, குரங்கு, நாய், பிள்ளை, பேய் நாய், பேய்நரி இவைகளின் விஷமும், கையான்தகரை, கண்டங்கத்திரிச் சாற்றில் ஈளை கஷயமும், கொடிக்கள்ளிச் சாற்றில் மாறற்சுரமும், குளிர்சுரமும், நல்லெண்ணெயில் விக்கலும், வெள்ளாட்டு நீரில் குஷ்டம், சோகை, காமாலையும், பசுவின் நீரில்கொள்ள, சொறி சிரங்கு, உளைவு, பெருவயிறு, மகோதரம், நீராமையும் நீங்கும். புளி, புகையிலை தள்ளவும்.

அதனை மூலத்தை ஆவின்பாலிற் கொள்ள (18) வகை எலி கடி விஷம் நீங்கும். பாலைக் கொப்பளிக்க, வாய் வேக்காடு வெட்டை தீரும்.

(இன்னும் வரும்)

க. ஞானபூபதி.